# 73

# எல்லாவற்றுடனும் தேவன்மீது அன்புகூருதல்

## மாற்கு 12:29, 30, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

"எல்லாவற்றிலும் பிரதான கற்பனை" என்பது நமது தற்போதைய பாடமாக உள்ளது.[1] நீங்கள், "பிரதான கட்டளை எது?" என்று கேட்கலாம். ஒருவேளையில் வேதபாரகர் ஒருவர் இயேசுவை அணுகி, இதே கேள்வியைக் கேட்டார். இங்கு கிறிஸ்துவின் பதில் தரப்படுகிறது:

> கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: "இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை (மாற். 12:29-31).

இதை நீங்கள் பெறுகின்றீர்கள்: எல்லாவற்றிலும் பிரதானமான கற்பனையைத் தேவன் அருளியிருக்கின்றார். அது எனது கருத்தாகவோ, அல்லது தவறிழைக்கக் கூடிய வேறு எந்த ஒரு மனிதரின் கருத்தாகவோ இருப்பதில்லை, ஆனால் அது தேவனுடைய குமாரன் எடுத்துரைத்த, வழக்கிட இயலாத கூற்றாக இருக்கிறது.

சற்று நேரம், இந்த வசனப் பகுதியின் வேண்டுகோள்களை, இன்றைய நாட்களில் அநேகரால் நடைமுறைப் படுத்தப்படும் மதத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். சிலருக்கு, மதம் என்பது மனச்சாட்சிக்கு இதமானதாகவும் தரத்தைக் கட்டி எழுப்புவதாகவும் உள்ளது. குறிப்பிட்ட சில பகுதிகளில், சபை உறுப்பினர்த்துவம் என்பது எல்லாக் காலத்திலும் உயர்வானதாக உள்ளது - ஆனால் குற்றம் மற்றும் இளம் வயதினரின் குற்றம் ஆகியவையும் கூட இவ்வாறே உள்ளன. அந்த இடங்களில், சபை உறுப்பினர்த்துவம் என்பது அதிகமாகுகையில், ஒழுக்கமும் ஒழுக்க நெறிகளும் கீழே தாழ்ந்து செல்லுகின்றன. பலருடைய வாழ்வில், மதமும் வாழ்க்கையும் முறிவு செய்து கொண்டுள்ளன. சிலர், மதம் என்ற தங்களது இடது கை செய்வதை, வியாபாரம் என்ற தங்களது வலது கை அறிவதற்கு அனுமதிப்பதில்லை.[2] இது மாற்கு 12:29, 30ல் கிறிஸ்துவின் போதனைக்கு மிகவும் தூரமாக உள்ளது.

*வேதபாரகனுக்கு இயேசு அளித்த பதிலில், எல்லாவற்றுடனும் தேவனை அன்புகூருதல் என்ற உண்மைக் கிறிஸ்தவத்தின் அச்சாணியை நாம் காண்கின்றோம்:*

- *"உன் முழு இருதயத்தோடும்" - உணர்வின் அமர்விடம்.*
- *"உன் முழு ஆத்துமாவோடும்" - வாழ்வின் [ஜீவனின்] அமர்விடம்.*
- *"உன் முழு மனதோடும்" - புத்திக்கூர்மையின் அமர்விடம்.*
- *"உன் முழு பலத்தோடும்" - சக்தியின் அமர்விடம்.*[3]

*இங்கு முழுமையான நபரின் ஆராதனை என்ற, உங்கள் ஆளுமைத் தன்மைக்கும் தேவனுடைய ஆளுமைத் தன்மைக்குமான முழுமையான பதில் உள்ளது. தேவன், ஒரு நனிநபரில் உள்ள எல்லாவற்றையும் விரும்பு கின்றார் அல்லது எதையும் அவர் விரும்புவதில்லை.*

*சிலர், நம்மீது இப்படிப்பட்ட வற்புறுத்துதலை ஏற்படுத்தத் தேவன் உரிமை கொண்டுள்ளாரா? என்று கேட்கலாம். தேவன், தாம் கொடுப்ப தற்கு மனவிருப்பமற்ற எதையும் நம்மிடத்தில் கேட்பதில்லை. தேவன் "எல்லாவற்றுடனும்" நம்மீது அன்புகூர்ந்துள்ளார்:*

> *"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3:16).*
>
> *"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8).*
>
> *"தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததி னால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங் களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவா. 4:9, 10).*

*கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றியும், தேவன் நமக்குச் செய்துள்ள யாவற்றையும் பற்றி நாம் நினைக்கையில், கவிஞருடன் சேர்ந்து நம்மால் பின்வருமாறு மட்டுமே கூறமுடியும்:*

*சராசரங்கள் அனைத்தும்*
*அவ்வன்புக்கு எம்மாத்திரம்*
*என் ஜீவன் சுகம் செல்வமும்*
*என் நேசருக்குப் பாத்தியம்.*[4]

# நமது முழு மனதோடும் தேவன்மீது அன்புகூருதல்

நாம் ஒவ்வொருவரும் "எல்லாவற்றுடனும் தேவனை அன்புகூருவதில்" நமக்கு உதவுவதற்காக, பிரதான கற்பனையின் பல்வேறு அம்சங்களையும் நாம் ஆழ்ந்து சிந்திப்போம். நாம் இதை மனதுடன் தொடங்குவோம்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில், ... உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக." மனம் என்பது, ஒரு தனிநபரின் புத்திக்கூர்மையை, சிந்திக்கும் பகுதியைக் குறிப்பிடுகிறது. மனதில்தான் மக்கள் தங்கள் வருமான வரியைக் கணக்கிடுகின்றனர்.[5] மனதில்தான் மக்கள் முக்கியமான கண்டுபிடிப்புகளை ஏற்படுத்துகின்றனர். நாம் நமது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும்போது, மனம்தான் அடிப்படையில் பயிற்றுவிக்கப்படுகிறது. ஆண்கள் மற்றும் பெண்களின் இந்தப் பாகம் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.

தேவனை நாம் நமது முழுமனதுடன் பல வழிகளில் அன்புகூர முடியும். அவரது வசனத்தைக் கருத்தாகப் படித்தல் என்பது அவற்றில் ஒரு வழியாக உள்ளது. மக்கெதோனியாவில் பவுலின் ஊழியத்தைப் பற்றி லூக்கா எழுதியபோது, பின்வரும் வசனப்பகுதியை அவர் உள்ளடக்கினார்: "அந்தப் பட்டணத்தார் [பெரேயா பட்டணத்தார்] மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" (அப். 17:11). மூப்பர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றிப் பவுல் தீத்துவுக்கு எழுதியபோது, மூப்பர் எனப்படுபவர், "ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்" என்று கூறினார் (தீத்து 1:9). தமது முழுமனதோடும் தேவன்மீது அன்புகூருகின்ற ஒருவர், ஒவ்வொரு நாளிலும் சில வேளையைத் திறந்த வேதாகமத்துடன் செலவிடுவார். மேலும் அவர், தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்ளும் படி கர்த்தருடைய சபையின் ஆராதனை ஊழியங்களிலும் வேதபாட வகுப்புகளிலும் [தவறாமல்] கலந்துகொள்ளுவார்.

மற்றும் - இது மிகவும் முக்கியமானதாக உள்ளது - அவர் தமது குடும்பத்துடன் ஒன்றுகூடி வேதாகமத்தை வாசிக்கவும், படிக்கவும், தங்கள் சொந்த இல்லத்தில் தனிப்பட்ட முறையில் ஒன்றுகூடி ஜெபிக்கவும் நேரத்தை ஒழுங்கு செய்வார். உலகத்தில் ஒவ்வொரு குடும்பமும் தனது வேலை மும்முரமான கால அட்டவணைகளில் ஆவிக்குரிய படிப்பிற்கும், தியானத்திற்கும் நேரத்தைக் கண்டறிந்தால் அது உலகிற்கு எவ்வளவு பலம் கொடுப்பதாயிருக்கும்! குற்றம் மற்றும் அதைத் தடுத்தல்[6] என்பதன்மீது அதிகாரம் கொண்டுள்ள புகழ்பெற்ற ஒருவர், பல ஆண்டுகளுக்கு முன்பு, பின்வருமாறு எழுதினார்:

குடும்ப வட்டாரத்திற்குள் பரிசுத்த வேதாகமத்தை வாசித்தல் என்பது, முன் எப்போதைக் காட்டிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இது குடும்பத்தை அதிகம் நெருக்கமாகப் பின்னப்பட்ட ஒரு அலகாக ஒன்றுசேர்த்து இழுக்கிறது. இது ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாழ்வதற்கான விசுவாசத்தைக் கொடுக்கிறது.

நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, எனது தாய், எனக்காக வேதாகமத்தை வாசிக்கும்போது நான் அவரின் முழங்கால்களில் அமர்ந்திருந்தேன். நாங்கள் ஒன்றாக நடந்து செல்லுகையில் அவர், அதன் அர்த்தத்தை எனக்கு விளக்கப்படுத்தினார். அது எங்களுக்கிடையில் உள்ள விசுவாசப் பிணைப்பைப் பலப்படுத்த உதவிற்று. பின்பு எனது தந்தை குடும்பம் முழுவதையும் தம்மைச் சுற்றி ஒன்றுகூட்டி, வேதாகமத்தில் இருந்து பல வசனங்களை வாசிக்கும் அற்புதமான அந்த இரவுகள் இருந்தன. இது ஆர்வமிகுந்த, ஜீவனுள்ள மற்றும் தகவல் நிறைந்த குடும்பக் கலந்துரையாடல்களுக்கு வழிநடத்திற்று. இந்த அற்புதமான வேளைகள் விசுவாசத்தின் வல்லமையினுடைய மனப்பதிவை விட்டுச் சென்றன மற்றும் ஜெபத்தின் வல்லமையானது எனது வாழ்வு முழுவதிலும் சோதனையான வேளைகளில் என்னை நிலைநிறுத்தியுள்ளது.

நாம் மதிநுட்பத்துடன் திட்டமிட்டு சரியான முடிவை மேற்கொள்ளும் போதுகூட, நாம் நமது முழுமனதுடன் அன்புகூருகின்றோம். இங்கு ஏற்புடைய இரண்டு வேத வசனப் பகுதிகள் உள்ளன: “ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்” (எபே. 5:15, 16). “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்” (மத். 6:33அ). தேவன்மீது அன்புகூரும் ஒருவர், தனிப்பட்ட தியானங்கள், பிறருக்கு உதவுதல், மற்றும் கர்த்தருக்கு ஊழியம் செய்தல் போன்ற, மிகவும் முக்கியமானவைகளாக இருக்கின்ற நடவடிக்கைகளுக்கு நேரத்தை ஏற்படுத்திக் கொள்ளுவார். அவரது மனமானது, “எனக்கு மிகச் சிறந்தது என்ன” என்பதையல்ல, ஆனால் “தேவனுடைய திட்டங்களுக்கும் நோக்கங்களுக்கும் மிகச் சிறந்தது என்ன” என்பதை முடிவு செய்வதில் விழிப்பான கருவியாக இருக்கும்.

சிலர் தேவனை முழுமனதோடு அன்புகூருவதற்கு, அந்த மனங்களை ஆண்டவருடைய ஊழியத்தில் முழு நேரமும் அர்ப்பணித்தல் என்பது ஒரு விசேஷித்த வழியாக உள்ளது. அவ்வப்போது நாம், இளம் மக்களுக்குப் பின்வருவது போன்ற கட்டளைகள் தரப்படுவதைக் கேட்கின்றோம்: ‘‘உனக்கு, வழக்கத்திற்கு மாறான நல்ல மனம் ஒன்றுள்ளது. நீ ஒரு மருத்துவராக [அல்லது வழக்கறிஞராக அல்லது அறிவியல் அறிஞராக] வேண்டும்.’’ கிறிஸ்தவ மருத்துவர்கள், கிறிஸ்தவ வர்த்தகர்கள், கிறிஸ்தவ வழக்கறிஞர்கள் மற்றும் பிற தொழில்களில் கிறிஸ்தவர்கள் என்ற தேவை உள்ளது; ஆனால் மிகவும் சிறந்த மனங்கள் என்பது, ஆண்களுக்கும் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் வேத வசனங்களைத் திறப்பதற்காகப் பிரசங்க மேடைகளிலும் வகுப்பறைகளிலும் நிற்க

வேண்டிய மிகவும் அவசியமான தேவையும் உள்ளது. வசனத்தைப் பிரசங்கித்தல் மற்றும் போதித்தல் என்பதைக் காட்டிலும் அதிகம் வேண்டப்படும் நிலை வேறெதுவும் இருப்பதில்லை. பிரசங்கித்தலும் போதித்தலும் நம்மிடையில் உள்ள மிகச் சிறந்த மனங்களிடத்தில் வேண்டப்படுவதாகவும் அவற்றிற்குத் தகுதியுள்ளதாகவும் இருக்கிறது.

நமது முழுமனதுடன் தேவன்மீது அன்புகூருவதை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், ஒரு எச்சரிக்கையை ஒலிப்பதற்காகச் சற்றே நிறுத்த என்னை அனுமதியுங்கள்: இது கட்டளையின் நான்கில் ஒரு பாகமாக மாத்திரம் உள்ளது. புத்திக்கூர்மையை மாத்திரம் வலியுறுத்துதல் என்பது, ஒரு குளிர்ந்த, அறிவுசார்ந்த மதத்தை விளைவிக்கக்கூடும். இரவு முழுவதும் விழித்திருந்து, ஒரு குண்டூசித் தலையின்மீது எத்தனை தூதர்கள் சௌகரிய மாக அமரக்கூடும் என்று விவாதிப்பதை மகிழ்வுடன் அனுபவிக்கின்ற புத்திக்கூர்மைப் பயிற்சியாளர்கள் உள்ளனர். இருப்பினும் மிகவும் அடிக்கடி, மதத்தைப் பற்றி வாக்குவாதம் செய்பவர் ஒரு தலைப்பினூடே நினைத்துப் பார்த்து[ம்] அதைக் குறித்து ஒன்றும் செய்யாமல் இருக்கின்றார். நாம் நமது மனங்களில் சிறந்த பகுதியைத் தேவனுக்குக் கொடுக்கத் தீர்மானிப்போம், ஆனால் கட்டளையின் இந்தப் பாகமானது தனித்து நிற்பதில்லை என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்வோமாக. இயேசு இதை, ஆண்டவருக்கென்று முழுமையாகத் தம்மை ஒப்புவித்துள்ள ஒரு மனிதரின் சித்திரத்தில் பின்னிப் பிணைத்தார்.

## நமது முழு இருதயத்தோடும் தேவன்மீது அன்புகூருதல்

அடுத்ததாக நாம், கட்டளையின் பின்வரும் பகுதியை ஆழ்ந்து சிந்திக்க விரும்புகின்றோம்: "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்புகூருவாயாக ..." "இருதயம்" என்ற வார்த்தை, வேதாகமத்தில் மாறுபட்ட பல வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு நபருடைய புத்திக்கூர்மையை அல்லது அவரது சித்தத்தைக் குறிப்பிடக்கூடும். இருப்பினும் இந்த சந்தர்ப்பப் பொருளில், இது உணர்வின் அமர்விடத்தை, உணர்தலின் மையத்தைக் குறிக்கிறது.

சில வேளைகளில் நாம், மதத்தின் உணர்வின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டு விடுகின்றோம். ஒருவேளை நாம் இன்றைய நாட்களில் மதங்கள் பலவற்றில் மேலோங்கியிருக்கும் உணர்வியத்திற்கு மறுசெயலாக இதைச் செய்திருக்கலாம். உணர்வுகளின் இடத்தை நாம் மிகவும் வலியுறுத்த விரும்பாதிருக்கையில், அவையின்றி எவரொருவரும் இயங்க மாட்டார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பின்வரும் வார்த்தைகளுக்கிடையில் உள்ள உறவுமுறையைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: emotion [உணர்வு], motive [நோக்கம்] and motor [விசை இயந்திரம்]. ஒரு மகிழ்வுந்தில் [காரில்] உள்ள விசை இயந்திரமானது அதைச் செலுத்துகிறது. வாழ்வில் உள்ள நோக்கம் என்பதும் இதையே செய்கிறது, இந்த நோக்கத்திற்குப் பின்னால் உணர்வு உள்ளது.

ஊக்கமான உணர்வைச் சுட்டிக்காண்பிக்கிற “enthusiasm” என்ற ஆங்கில வார்த்தையானது, “தேவனில்” அல்லது “[நமக்குள்] தேவன்” என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ள இரண்டு கிரேக்க வார்த்தைகளில் இருந்து வருகிறது. நாம் தேவனுக்குள்ளும், தேவன் நமக்குள்ளும் இருந்தால் (1 யோவா. 4:16), நாம் ஊக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்; நாம் ஊக்கமான உணர்வுகளால் நிறைந்திருக்க வேண்டும். டேவிட் லிப்ஸ் கோம்ப்[7] அவர்களை அறிந்தவர்கள், அவர் ஒருமுறை அழுததைக் கண்ட தாகக் கூறினார்கள். அது, ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில், சகோதரர் லிப்ஸ்கோம்ப் அவர்கள், கர்த்தருடைய பந்திக்குப் பொறுப் பேற்றபோது நடந்தது. அவர், கர்த்தருடைய பந்தியின் தனிச்சிறப்பு பற்றி ஒரு சுருக்கமான உரை நிகழ்த்தினார், தமது உரையின் மத்தியில் பேச்சுக் குலைந்தவராகி, உரையை முடிக்க இயலாதவரானார். சகோதரர் லிப்ஸ் கோம்ப் அவர்கள் தமது மனதைக் கொண்டல்ல ஆனால் தமது இருதயத் தைக் கொண்டு அந்தக் கண்ணீரை வடித்தார்.

நீண்ட காலத்திற்கு முன்பு தாவீது ராஜா, பழைய ஏற்பாட்டின் மிகவும் வல்லமை நிறைந்த வசனப் பகுதிகளில் சிலவற்றை எழுதினார். அவர் எழுதிய சங்கீதங்களை நாம் இன்னமும் வாசித்து நேசிக்கின்றோம். அவற்றைத் தாவீது தமது இருதயத்திலிருந்து எழுதினார் என்ற உண்மையே, அவைகள் நம்மீது பெருமளவு செயல்வலிவு கொண்டிருக்கக் காரண மாகிறது. “அவர் தமது சொந்த உணர்வின் ஆழத்திலிருந்து நீர்ம அக்கினியின் வசனப்பகுதிகளை வெளியே ஊற்றினார், அவைகள் இன்னமும் நமது இருதயங்களில் அக்கினியை மூட்டுகின்றன.”[8]

நமது முழு இருதயத்துடனும் தேவன்மீது அன்புகூருதல் என்பது எதனை அர்த்தப்படுத்துகிறது? நாம் ...

- கட்டாயத்தின் நிமித்தமல்ல ஆனால் விருப்பத்துடன் நாம் தேவனுக் குக் கீழ்ப்படியும்போது,
- தேவனுக்கு ஒப்பாக நாம் வேறெதன்மீதும் அவருடன் உள்ள உறவைத் தவிர வேறு எதன்மீதும் நாம் அன்புகூராதிருக்கும்போது,
- எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவன்மீது அன்புகூரும்போது.

மற்றும், நாம் அவருக்கு மிகச் சிறந்த வகையில் ஊழியம் செய்வதற்கு, தேவைப்பட்டால் ஏதொன்றையும் விட்டுவிடுவதற்கு மனவிருப்பமாக இருக்கும்போது, நாம் தேவனிடத்தில் நமது முழு இருதயத்தோடும் அன்புகூருகின்றோம். நாம் ...

- ஆபிரகாமைப் போல, அன்பார்ந்தவர்களை விட்டுப் பிரிய மனவிருப்பமாயிருக்க வேண்டும்.
- யோபுவைப் போல, உடைமைகளை விட்டுப்பிரிய மனவிருப்பமாயிருக்க வேண்டும்.
- மோசேயைப்போல, சந்தோஷங்களை விட்டுப் பிரிய மனவிருப்பமாயிருக்க வேண்டும்.

மீண்டுமாக, நாம் தேவனுக்காக எதையும் செய்ய மனவிருப்பமாய்

இருக்கும்போது, நாம் தேவன்மீது நமது முழு இருதயத்தோடும் அன்பு கூருகின்றவர்களாய் இருக்கின்றோம்:

- தாவீதைப் போல மனந்திரும்ப மனவிருப்பமாயிருத்தல்.
- பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்களைப் போல ஞானஸ்நானம் பெற மனவிருப்பமாயிருத்தல்.
- பவுலைப்போல சரீரத்தை அடக்கிக் கீழ்ப்படுத்த மனவிருப்பமாயிருத்தல்.
- தொற்காளைப் போல ஊழியத்தைச் செய்ய மனவிருப்பமாயிருத்தல்.
- சகேயுவைப் போல கொடுப்பதற்கு மனவிருப்பமாயிருத்தல்.

சபைக்கு அதிகமான உணர்வும் அதிகமான இருதயப்பூர்வமான ஊழியமும் அவசியமாக உள்ளது. இருப்பினும், மீண்டும் ஒருமுறை எச்சரிக்கையொன்று ஒலிக்கப்பட வேண்டும். சிலர் மதத்தில் உணர்வுகளும் மனஎழுச்சிகளும் மற்ற ஒவ்வொன்றையும் வெளியேற்றும்படி அனுமதித்துள்ளனர். கண்டிப்பாக உணர்வுகளின்படி நடக்கின்றவர்கள், விதைகள் விழுந்த அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களைப் போன்றவர்களாய் இருக்கின்றனர். மண் அதிக ஆழமாயிராததினாலே, செடிகள் சீக்கிரமாய் முளைத்து மற்றும் உலர்ந்து போயின (மத். 13:6). இன்றைய நாட்களில் பலர், ஏதாவதொன்று அவர்களை ஆழமாகக் கலக்கினால், அதைப் பற்றி அவர்களுக்கு ஆழமான உணர்வுகள் இருக்குமானால், அது தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கவேண்டும் என்று அவர்கள் விசுவாசிக்கின்றார்கள். ஆனால், விஷயம் இப்படிப்பட்டதாக இருப்பதில்லை. நாமகரணக் கூட்டத்தினரின் உலகமானது ஆவியில் அடிக்கடி ஊக்கமுள்ளதாக இருக்கிறது, ஆனால் தேவனுடைய கற்பனைகளைக் கடைப்பிடிப்பதில் கவனமற்றதாக இருக்கிறது (ரோமர் 10:2ஐக் காணவும்).

எல்லாவற்றிலும் பிரதான கட்டளையில் இயேசு, இருதயம் மற்றும் சிந்தை, உணர்வு மற்றும் மதிநுட்பம் ஆகியவை ஒன்று கலந்திருக்க வேண்டும் என்று மறைமுகமாய் உணர்த்தினார். நாம் உணர்வுகளை ஒரு காரின் இயக்கு இயந்திரத்துடன் ஒப்பிட்டோம், ஆனால் புத்திக்கூர்மையானது திருப்பும் உபகரணத்துடன் ஒப்பிடப்படலாம். இது காரானது விரும்பப்படும் அடைவிடத்தைச் சென்றடைய உதவுகிறது. நல்ல இயக்கு இயந்திரம் இருந்து, திருப்பும் சக்கரம் இல்லாத காரானது அதிக தூரம் செல்லலாம், ஆனால் அது எங்கு சென்று நிற்கும் என்று யாருக்குத் தெரியும்? இதற்கு மறுபுறத்தில், திருப்பு சக்கரத்தைக் கொண்டிருந்து இயக்கும் இயந்திரம் இல்லாத காரானது எவ்விடத்திற்குமே செல்லாது. ஒரு காருக்கு இவ்விரண்டும் அவசியமாயுள்ளன. அதுபோலவே, தேவன் விரும்புகின்ற வகையிலான மதத்தைக் கொண்டிருப்பதற்கு, மனமும் இருதயமும் அவசியமாகின்றன. மனமானது பிதாவினுடைய சித்தத்தைக் கற்றுக் கொண்டு நம்மை அவரால் அமைக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் காத்துக் கொள்ளுகிறது. பின்பு இருதயமானது தேவனுடைய எல்லைகளுக்குள்ளாக நமது உணர்வுகளை இதமாக்கி வலுப்படுத்தி, சர்வ வல்லவருக்கு ஆராதனையும் ஊழியமும் செய்கிறது. நாம் நமது முழு மனதோடும் முழு இருதயத்

தோடும் தேவன்மீது அன்புகூர முனைப்புடன் செயல்படுவோமாக.

## நமது முழுப் பலத்தோடும் தேவன்மீது அன்புகூருதல்

மேலும் இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ... உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" என்றும் கூறினார். தனிநபர் ஒருவரின் பலம் என்பது அவரது திறமைகள் மற்றும் சக்தி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதுவரையிலும் நாம், தேவனை மனதுடனும் (புத்திக் கூர்மையின் மையம்) இருதயத்துடனும் (உணர்வுகளின் மையம்) அன்பு கூருதலைப் பற்றிக் கலந்துரையாடியுள்ளோம், ஆனால் இவ்விரண்டும் ஒரு தனிநபரின் உள்ளான விஷயங்களாக இருக்கின்றன. நாம் உண்மையிலேயே தேவன்மீது அன்புகூர்ந்தால், அந்த அன்பு வெளிப்படுத்தப்படும்: அது செயலில் வெளிப்படுத்தப்படும், அது கீழ்ப்படிதலில் வெளிப்படுத்தப்படும்.

கிறிஸ்தவம் என்பது *செய்கின்ற* மதமாக உள்ளது. கிறிஸ்து, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி *செய்கிறவனே* பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி 'கர்த்தாவே! கர்த்தாவே' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று கூறினார் (மத். 7:21). யாக்கோபு "அல்லாமலும், நீங்கள் உங்களையே வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி *செய்கிறவர்களாயும்* இருங்கள்" என்று எழுதினார் (யாக். 1:22). இதனைப் பவுல் பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் *செய்த* நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப் பட வேண்டும்" (2 கொரி. 5:10). தேவனுடைய ஊழியத்தில் தமது பலத்தைப் பயன்படுத்த மனவிருப்பம் இல்லாதவர் பரலோக ராஜ்யத்திற்குத் தகுதியானவர் அல்ல.

நாம் தேவனை நமது முழு பலத்துடனும் அன்புகூருவது எவ்வாறு? முதலாவது, நாம் கொண்டுள்ளவற்றை தேவனுக்காகப் பயன்படுத்தும் போது, நாம் அவர்மீது நமது முழு பலத்துடன் அன்புகூருகின்றோம். திறமையும் வாய்ப்பும் இணைந்தால் அது பொறுப்புக்குச் சமமாகிறது. கர்த்தருடைய ஊழியத்தில் உங்கள் திறமைகளையும் சக்திகளையும் எவ்வளவு சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்பதைத் தீர்மானியுங்கள். நாம் ஒவ்வொருவரும் எக்காலத்திலும் மேம்படுத்துவதைக் காட்டிலும் பத்து மடங்கு அதிக திறமை உடையவர்களாய் இருக்கின்றோம் என்று கூறப்பட்டுள்ளது. நீங்கள் கிறிஸ்துவுக்காக உங்கள் திறமைகளை மிகச் சிறப்பாக மேம்படுத்த முடிந்த அளவு செய்யுங்கள்.

மற்றும், ஏற்கனவே கருத்துத் தெரிவித்தபடி, நமது இருதயங்களில் உள்ள அன்பு, உறுதியான செயலில் வெளிப்படுத்தப்படும்போது, நாம் தேவன்மீது அன்புகூருகின்றோம். இதை எளிமையாகக் கூறுவதென்றால் நாம் எஜமானருக்காக *ஊழியம் செய்ய* வேண்டும் (1 கொரி. 15:58). மதத் தலைவர் ஒருவர் மெதுவாகச் செயல்பட வேண்டியது அவசியம் என்று

அவரது மருத்துவர்களால் அவருக்குக் கூறப்பட்டது. அதற்கு அவர், "நான் இறந்து ஐந்து நிமிடங்களுக்குப் பின்பு ஓய்வுகொள்ளத் தொடங்குவேன்" என்று பதில் அளித்தார். கடந்த தலைமுறையில் குறிப்பிடத்தக்கவராயிருந்த ஒரு சுவிசேஷ ஊழியர், தாம் முதுமையடைதல் என்பதை நோக்கங் கொண்டிராமல், கிறிஸ்துவின் ஊழியத்தில் தம்மையே களைப்புற்றுப் போகச் செய்வதை மாத்திரமே விரும்பியதாக ஒருமுறை கூறினார். என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம்; நம் யாவருக்குமே அவ்வப்போது ஓய்வு தேவைப்படுகிறது (மாற். 6:31). துருப்பிடித்துப் போவதைக் காட்டிலும் களைப்புற்றுப் போவது மேன்மையானதாக உள்ளது.

கடைசியாக, தேவனுக்கு நாம் நமது மிகச் சிறந்தவற்றைத் தருகின்ற போது, அவர்மீது நாம் நமது முழுப் பலத்துடன் அன்புகூருகின்றோம். மிகவும் அடிக்கடி, எனது குடும்பமானது எங்களது வயதான நாயை நடத்துவது போல் நாம் கர்த்தரை நடத்துகின்றோம்: நாம் அவருக்கு எஞ்சிய வற்றைக் கொடுக்கின்றோம். நாம் பிழைப்பதற்கு ஒரு வழியை ஏற்படுத்திக் கொண்டு மற்ற செயல்களில் ஈடுபட்ட பின்பு நம்மிடத்தில் எஞ்சியுள்ள நேரம், பணம், திறமை மற்றும் சக்தி ஆகியவற்றைத் தேவன் விரும்புவ தில்லை. அவர் நம்மில் உள்ள மிகச் சிறந்தவற்றை விரும்புகின்றார் (மத். 6:33). நாம் அவர்மீது முழு பலத்துடன் அன்புகூர்ந்தால், நமது மிகச் சிறந்தவற்றை நாம் அவருக்குக் கொடுப்போம்.

தேவன்மீது நமது முழு பலத்துடன் அன்புகூருதல் என்பது அவருக்கான நமது முழுப்பொறுப்பின் பகுதியாக இருக்க வேண்டும். சிம்சோன் தமது முழு பலத்துடனும் தேவன்மீது அன்புகூர்ந்தார். ஆனால் அவர் தமது முழு மனதுடனும் முழு இருதயத்துடனும் அன்புகூரத் தவறிவிட்டார். நமது பலத்தினால் வெளிப்படுத்தப்படும் அன்பு, புத்திக்கூர்மையால் வழிநடத்தப் பட்டு உணர்வுகளால் தூண்டப்பட வேண்டும். இருப்பினும், கிறிஸ்துவுக் காக ஊழியம் செய்தல் என்பது நமது அன்பின் உண்மைத் தன்மையைச் சுட்டிக்காண்பிக்கிறது என்பதை மறந்து விட வேண்டாம்.

## நமது முழு ஆத்துமாவோடும் தேவன்மீது அன்புகூருதல்

கடைசியாக, இயேசு "உன் தேவனாகிய கர்த்தரை ... உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூருவாயாக" என்று கூறியதைக் கவனிக்கின்றோம். ஆத்துமா என்பது கிறிஸ்துவின் பட்டியலில் இரண்டாவதாக இருந்தது, ஆனால் இது பிதாவுக்கான நமது பதில்செயலின் தொகுப்புரையாகப் பயன்படும் என்பதால், நான் இதனைக் கடைசியாகக் கூறும்படி விட்டு வைத்தேன்.

"ஆத்துமா" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை *psuche* என்பதாகும், இது *psyche* என்றும் எழுதப்படுகிறது, இந்த வார்த்தையில் இருந்துதான் நாம் "psychology" (உளவியல்) போன்ற வார்த்தைகளைப் பெறுகின்றோம். இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் சில

வேளைகளில் - ஒரு நபரின் சிந்திக்கும் அல்லது உணரும் பாகமான - "மனம்" அல்லது "இருதயம்'' என்பவற்றிற்குச் சமமாகப் பயன்படுத்தப்படுகிறது. நம்மில் பலருக்கு, ''ஆத்துமா'' என்ற வார்த்தையானது, ஆவி அல்லது மனிதனின் நித்தியமான பாகம் என்பதன் ஒரு பொருட்சொல்லாக உள்ளது. இருப்பினும், மாற்கு 12:29, 30ல் இவ்வார்த்தையானது புத்திக்கூர்மை மற்றும் மனம் என்பவற்றுடன் நேரெதிராக ஒப்பிடப்பட்டு அவற்றுடன் இணையாக இருப்பதாக நடத்தப்படுகிறது. இதுவரை தரப்பட்டுள்ள இரண்டு விளக்கங்களும் பொருத்தமானவைகளாகக் காணப்படுவதில்லை.[9] Psyche என்ற வார்த்தை ''ஜீவன்'' என்ற வார்த்தையாக அடிக்கடி மொழிபெயர்க்கப்படுவதில் நாம் ஒரு குறிப்பைக் கண்டுபிடிக்கலாம். அதைத் தொடர்ந்து வருகிற நன்கு அறியப்பட்ட வசனப்பகுதியைக் கவனியுங்கள். அவை ஒவ்வொன்றிலும் "ஜீவன்" என்ற வார்த்தை psyche என்பதில் இருந்தே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

> "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?" (மத். 6:25).

> "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை'' (யோவா. 15:13).

> "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியக்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத். 20:27, 28).

இந்த வசனப்பகுதிகளில், psyche என்ற வார்த்தை, ஒரு மனிதனுக்குள் இருக்கிற ஜீவனைக் குறிக்கிறது. எனக்கு, தேவன்மீது "ஒருவர் தம் முழு ஆத்துமாவுடன்" அன்புகூருதல் என்பது அவர் தம்முடைய முழுமையையும் கொண்டு - ஒருவர் தாம் கொண்டுள்ள யாவற்றையும் கொண்டு, எல்லாவற்றினாலும் மற்றும் முடிந்த எல்லாவற்றினாலும் - அன்புகூருதல் என்பதாகும்.

தற்போது கவனித்த வசனப்பகுதிகளில் இருந்து நமது குறிப்பை எடுத்துக் கொண்டால், நமது ஜீவனைக் கொண்டு தேவனிடத்தில் அன்பு கூருதல் என்பது, பூமிக்குரிய இந்த வாழ்க்கையில் உலகப்பிரகாரமான பொருட்கள் யாவற்றிற்கும் மேலாகத் தேவனுக்கு இடங்கொடுத்தலை உள்ளடக்குகிறது. இது, தேவைப்பட்டால் அவருக்காக நமது வாழ்வையே தியாகம் செய்யும் மனவிருப்பத்தை - மற்றும் நமது வாழ்வை அவருக்கும் மனிதகுலம் முழுவதற்கும் ஊழியம் செய்வதில் பயன்படுத்தும் மன விருப்பத்தை - மறைமுகமாக உணர்த்துகிறது. தேவன்மீது நமது முழு ஆத்துமாவுடனும் அன்புகூருதல் என்பது நம்மை - இருதயம், உடல் மற்றும்

ஆத்துமா ஆகியவற்றை - முற்றிலுமாக அவருக்குத் தருதல் என்பதாக உள்ளது. T. B. லாரிமூர் என்ற மாபெரும் முன்னோடிப் பிரசங்கியார், "மனம், தசை மற்றும் பணம்; காலம், நாவு மற்றும் திறமை; தலை, கை மற்றும் இருதயம்; உடல், ஆத்துமா மற்றும் ஆவி"[10] இவை யாவும் நமது கர்த்தருக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

## முடிவுரை

இவ்விடத்தில் ஒரு முழு நபருக்கான மதம் உள்ளது: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" (மாற். 12:30). ஒரு உழைப்பாளி தமது கரங்களைப் பயன்படுத்துகின்றார். ஒரு கைவினைக் கலைஞர் தமது கரங்களையும் தமது தலையையும் பயன்படுத்து கின்றார். ஒரு சித்திரக் கலைஞர் தமது கரங்களையும், தமது தலையையும், தமது இருதயத்தையும் பயன்படுத்துகின்றார். ஒரு கிறிஸ்தவர் தமது கரங் களையும், தமது தலையையும், தமது இருதயத்தையும், தமது வாழ்வையும் தேவனுக்காகப் பயன்படுத்துகின்றார். மாற்கு 12:30 வசனமானது கர்த்தருக்கென்று முழுமையாய்த் தம்மை அர்ப்பணித்த ஒருவரைப் பற்றிய சித்தரிப்பாக உள்ளது.

ஞானஸ்நானத்தின்போது, தனிநபர்களுக்கிடையில் மாபெரும் வேறுபாடு உள்ளது. ஒரு நபர், கர்த்தர் கொடுத்துள்ள கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதற்காக, ஆனால் நாம் படித்துள்ள வேத வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள அன்பின் ஆழம் எதுவுமின்றி பதில்செயல் செய்கின்றார். அவர் தமது மாதாந்திரக் கட்டணச் சீட்டுகளுக்குப் பணம் செலுத்துகின்ற அதே வழிமுறையில் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகின்றார். இது ஏறக்குறைய ஒரு துண்டுத்தாளில் உள்ள பட்டியலைப் போன்றுள்ளது: "நான் விசுவாசித்து, பின்பு மனந்திரும்பி, பின்பு அறிக்கையிட்டு, பின்பு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது." அவர் நித்தியத்திற்கும் இழந்துபோகப்படுதலைத் தவிர்ப்பதற்காக இவை ஒவ்வொன்றையும் தர்க்க ரீதியாக ஆய்வு செய்கின்றார்.

இயந்திரத்தனமான இந்தக் கீழ்ப்படிதலை, நமது வேதபாடப் பகுதியினால் கருத்தாகத் தெரிவிக்கப்படும் ஆழமான கீழ்ப்படிதலுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பாருங்கள்: இன்னொரு நபர், அதே அழைப்பிற்குக் கிறிஸ்துவிடம் தம்மையே தருவதில் பதில்செயல் செய்கின்றார். தேவன் மீதான அன்பு என்ற இவரது நோக்கமானது இவர் தமது பாவங்களில் இருந்து மனந்திரும்பவும், மனிதர்களுக்கு முன்பாக தமது விசுவாசத்தை அறிக்கையிடவும், ஞானஸ்நானம் பெறவும் இவரை வழிநடத்துகிறது.[11] இவருடைய கீழ்ப்படிதலானது சுமையானதாக இருப்பதில்லை, ஆனால் தம்மையே தேவனுக்கு முன்பாக வெறுமையாக்குதலாக இருக்கிறது. இவர் ஏதொன்றையும் [தமக்கென்று] பின்வைத்துக்கொள்வதில்லை; இவர் தம்முடைய யாவற்றையும் அர்ப்பணிக்கின்றார், என்றென்றும் தம்மைச் சிருஷ்டித்த தேவனுக்காக இருப்பதில் நம்பிக்கையுடன் உள்ளார். இதையே

*இயேசு விரும்புகின்றார்.*

*நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தால் - அல்லது நீங்கள் தேவனுடைய பிள்ளையாயிருந்தும் தவறு செய்திருந்தால் மறுபடி கட்டியெழுப்பப்பட வேண்டியிருந்தால்[12] - நீங்கள் அதை, அன்பு நிறைந்த இருதயத்தில் இருந்து வருகிற கீழ்ப்படிதலுடன் செய்யவேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.*

---

*குறிப்புகள்*

[1]This sermon is based on Batsell Barrett Baxter, "The Greatest Commandment of All," *If I Be Lifted Up* (Nashville: Gospel Adocate Co., 1956), 9-18. [2]*இந்த ஒப்புவமை மத்தேயு 6:3ன் சொல்லாக்கத்தினுடைய அடிப்படையில் அமைந்துள்ளது.* [3]*இந்த நான்கு மேற்கோள்களிலும் ''எல்லாம்'' என்ற வார்த்தையின்மீது வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது.* [4]Isaac Watts, "When I Survey the Wondrous Cross," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [5]*மனம் பற்றிய இந்த விவரிப்புகளை நீங்கள் வாழும் பகுதிக்குத் தக்க வகையில் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [6]*இந்த மேற்கோளுக்காக, எட்கர் ஹூவர் அவர்களுக்கு நன்றி தெறிவிக்கப்படுகிறது, இவர்* FBI (Federal Bureau of Investigation in the USA) *என்ற நிறுவனத்தில் பல ஆண்டுகளாகப் பணியாற்றினார். இது கடந்த காலங்களில் சபை அறிவிப்புப் பலகைகளில் அடிக்கடி காணப்படக்கூடிய ஒரு மேற்கோளாக இருந்தது. தொடக்க ஆதாரமூலம் அறியப்படாததாக உள்ளது.* [7]*டேவிட் லிப்ஸ்கோம்ப் அவர்கள் கர்த்தருடைய சபையின் உறுப்பினராவார், இவர் The Gospel Advocate என்ற வெளியீட்டின் முதல் ஆசிரியர்களில் ஒருவராக இருந்தார். நாஷ்வில், டென்னஸ்ஸீயில் உள்ள டேவிட் லிப்ஸ்கோம்ப் பல்கலைக் கழகம் இவரது நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.* [8]Baxter, 15. [9]Psyche *என்பது ஒரு நபரை மாத்திரம் குறிக்கவும் கூடும் ("ஆத்துமாக்கள்"; அப். 2:41). மற்ற விளக்கங்களும் தரப்படக்கூடும், ஆனால் அவை எல்லாவற்றையும் கணக்கிடுதல் என்பது இங்கு ஏற்படுத்தப்படும் கருத்திற்கு அவசியமானதல்ல.* [10]Quoted in Avon Malone, "The Characteristics of a Good Steward," *The Preacher's Periodical* (July 1983): 11.

[11]*ஏதேனும் ஒருவேளையில், நீங்கள் விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றைக் கட்டளையிடுகின்ற வசனப் பகுதிகளை (மாற். 16:16; அப். 2:38; ரோமர் 10:9, 10) குறிப்பிட விரும்பலாம்.* [12]*கர்த்தரிடமாய்த் திரும்புதல் எவ்வாறு என்பது பற்றிய வசனப்பகுதிகளை (அப். 8:22; யாக். 5:16) முன் வைக்க நீங்கள் விரும்பலாம்.*